கட்டும் திறமைவாய்ந்த மருத்துவர்கள் பலர் இருப்பதால் சித்த மருத்துவத்துறையில் எலும்பு முறிவு சிகிச்சை பிரிவு எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் திறக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது முடியுமா என்பது பரிசீலிக்கப்பட வேண்டும்.

Identity cards for medical attendance

*7 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the pensioners entitled to medical benefits have been supplied with pass books; and

(*b*) if not, the reasons for the delay?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு இலவச மருத்துவ வசதி பெறுவதற்காக அடையாளச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் அடையாளச் சீட்டு பெறாத ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு, இலவச மருத்துவ வசதிக்கான அடையாளச்சீட்டு வழங்கப்படுவதைக் குறித்து தெளிவான விளம்பரப் பலகையொன்று எல்லா கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும், சென்னையிலுள்ள சம்பளக் கணக்கு அலுவலகத்திலும் வைக்குமாறு கருவூலக் கணக்கு இயக்குநர், கருவூலக அதிகாரிகளையும், துணைக் கருவூலக அதிகாரிகளையும், சம்பளக் கணக்கு அதிகாரியையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, are the families of the pensioners also eligible for medical benefits. I think so far they have not been given. Will the Government take steps to extend to the families of pensioners also these facilities?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சில விதிமுறைகளுக்கு உட்பட்டு அவர்களுடைய குடும்பத்தாருக்கு இந்த வைத்தியவசதி உதவித் தொகை அளிக்கப்படுகிறது.